# பொதுத் (தேர்தல்கள்) துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022–2023

மானியக் கோரிக்கை எண். 38

**துரைமுருகன்**

**நீர்வளத்துறை அமைச்சர்**

©

தமிழ்நாடு அரசு

2022

# கோரிக்கை எண். 38.02 தேர்தல்கள்
# கொள்கை விளக்கக் குறிப்பு

மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தையும், உரிமையையும் பொறுத்து, ஒருநாட்டின் வளர்ச்சி நிர்ணயிக்கப்படுகிறது. இந்தியா, சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஒரு ஜனநாயக நாடாக இருந்துவரும் நிலையில், சாதாரண குடிமக்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தவும், எடுத்துரைக்கவும் மற்றும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் வாய்ப்பளிக்கிறது.

இந்தியத் தேர்தல் ஆணையமானது, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களைக் கொண்ட

அமைப்பாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 324–ன்கீழ், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின் மூலம் வாக்காளர் பட்டியல்களை தயாரித்தல், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத்திற்கான அனைத்துத் தேர்தல்களை நடத்துதல், குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

மாநிலத்தில், தேர்தல் துறையின் தலைவராகச் செயல்படும் தலைமைத் தேர்தல் அதிகாரி, 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, இந்தியத்

தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளை ஏற்று செயல்படுத்துகின்றார். மாவட்ட அளவில், பொதுத் (தேர்தல்கள்) துறை மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, அனைத்து பணிகளையும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு, பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர், மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பின்வரும் பணியாளர்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரிக்கு உதவுகின்றனர்:

i) வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு வாக்காளர் பதிவு அதிகாரிகள்

(Electoral Registration Officers – EROs) மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் (Assistant Electoral Registration Officers – AEROs).

ii) தேர்தல் நடத்தும் பணிகளுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Returning Officers – ROs) மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Assistant Returning Officers – AROs).

iii) ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer – BLO).

பொதுவாக வருவாய்க் கோட்ட அலுவலர்கள் நிலையில் உள்ளோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும், மாநகராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் துணை

ஆணையர்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் உள்ளனர். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர்கள் அந்தந்த மண்டலங்களுக்குரிய வாக்காளர் பதிவு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள், மாநகராட்சி மண்டலப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அலுவலர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் அந்தந்த மண்டலங்களுக்குரிய உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# 1. 2022–2023 ன் முக்கிய நிகழ்வுகள்

## 1.1. வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2022

1950–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் பிரிவு 21–ன்படி, ஒவ்வொரு மக்களவை அல்லது மாநில சட்டமன்றப் பேரவைப் பொதுத்தேர்தல்கள் மற்றும் தற்காலிகமாக ஏற்படும் காலியிடத்திற்கான இடைத்தேர்தலுக்கு முன்பு சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யப்படுகிறது. சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் அடிப்படையில் எந்த ஒரு வருடத்திலும் குறிப்பிட்ட தகுதியேற்படுத்தும் தேதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாக வாக்காளர் பட்டியலின் வருடாந்திர திருத்தமானது

ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதல் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

01.01.2022–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தமானது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது:–

| | |
|---|---|
| **வரைவுப் பட்டியல் வெளியீடு** | **01.11.2021** |
| **கோரிக்கை/ மறுப்புரை அளிக்க கடைசி தேதி** | **30.11.2021** |
| **இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு** | **05.01.2022** |

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, மேற்குறிப்பிட்ட வாக்காளர் பட்டியல் திருத்தத்தில், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற சேர்த்தல்கள் / நீக்குதல்கள் / திருத்தங்கள் பின்வருமாறு:–

| | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சேர்த்தல்கள் | 4,56,071 | 5,60,735 | 650 | 10,17,456 |
| நீக்குதல்கள் | 1,46,979 | 1,39,007 | 188 | 2,86,174 |
| திருத்தங்கள் | 1,40,328 | 1,41,378 | 93 | 2,81,799 |

கீழ்க்குறிப்பிட்ட விவரங்களின்படி, 05.01.2022 அன்று இறுதி வாக்காளர் பட்டியலில் மொத்தம் 6.36 கோடி வாக்காளர்கள் இருந்தனர்:–

| | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பொது வாக்காளர்கள் | 3,12,26,759 | 3,23,91,250 | 7,804 | 6,36,25,813 |
| பணித் தொகுதி வாக்காளர்கள் | 71,693 | 1,892 | 0 | 73,585 |
| **மொத்தம்** | 3,12,98,452 | 3,23,93,142 | 7,804 | 6,36,99,398 |

## 1.2. வாக்குச்சாவடிகள் சீரமைப்பு, 2022

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2022–இன், முன் திருத்த நடவடிக்கையாக, வாக்குச்சாவடிகளின் சீரமைப்பு மற்றும் பிரிவுகளை உருவாக்குதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கும், கிராம மற்றும் நகரப் பகுதிகளில் 1500 வாக்காளர்களுக்கு மேற்பட்ட வாக்காளர்களைக் கொண்ட அனைத்து வாக்குச் சாவடிகளை சீரமைக்கவும் / திருத்தியமைக்கவும் இந்தியத்

தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. 1500–க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் கொண்ட வாக்குச் சாவடிகளுக்கு புதிய பகுதிகளை உருவாக்குதல் / இடம் மாற்றம் / கட்டடம் / பிரிவுகளின் மறுசீரமைப்பு / இணைப்பு / வாக்குச் சாவடிகளின் பெயர் மாற்றம் ஆகியவற்றுக்காக அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளிடமிருந்தும் பெறப்பட்ட கருத்துருக்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரைக்கப்பட்டன. கட்டுப்பாட்டு அட்டவணை தரவுத்தளத்தில் மாற்றங்களை மேற்கொள்ளக் கோரி, இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அக்கருத்துருக்கள், அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டன.

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2022–இன்படி வாக்குச்சாவடி சீரமைப்பிற்குப் பின், மொத்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 67,775–லிருந்து 68,019– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## 1.3. தேசிய வாக்காளர் தினம், 2022

இந்தியத் தேர்தல் ஆணையம், தன்னுடைய நிறுவன தினமான ஜனவரி 25–ஆம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக, ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடி வருகின்றது. 2022–ஆம் ஆண்டின் தேசிய வாக்காளர் தினத்தின் முக்கிய குறிக்கோள், **"அனைவரையும் உள்ளடக்கிய அணுகக்கூடிய**

**மற்றும் பங்கேற்கத்தக்க தேர்தல்களை உருவாக்குவோம்**" என்பதாகும்.

25.01.2022 அன்று புதுடெல்லியில் இந்தியத் தேர்தல் ஆணையம் நடத்திய பன்னிரெண்டாவது தேசிய வாக்காளர் தின விழாவில், "மின் ஆளுமை முன்னெடுப்பு" என்ற பிரிவின்கீழ் மிகச் சிறந்த முறையில் பணியாற்றியமைக்காக 2021–ஆம் ஆண்டிற்கான சிறந்த மாநில விருது தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்தியபிரத சாகு, இ.ஆ.ப., அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், திருநெல்வேலி மாவட்டத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சியருமான திரு. வி. விஷ்ணு, இ.ஆ.ப., மின் ஆளுமை முன்னெடுப்புக்காகவும், தூத்துக்குடி மாவட்டத் தேர்தல் அதிகாரி மற்றும்

மாவட்ட ஆட்சியருமான டாக்டர் கே. செந்தில்ராஜ், இ.ஆ.ப., வாக்காளர் விழிப்புணர்வுக்காகவும், அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. பிரதீக் தயாள், இ.ஆ.ப., வாக்குப்பதிவுப் பொருட்களை சிறந்த முறையில் கையாண்டமைக்காகவும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வருமான வரி இயக்குநர் திரு. பிரவீன் குமார், இ.வ.ப., மற்றும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வருமான வரி ஒருங்கிணைப்பு அலுவலர் திரு. பி.எஸ். சிவசங்கரன், இ.வ.ப., தேர்தல் செலவினக் கண்காணிப்புக்காகவும் விருதுகள் வழங்கப்பட்டது.

தேசிய வாக்காளர் தினமானது மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும்

மாநிலத்தின் 31,241 வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் கொண்டாடப்பட்டது. வாக்காளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான வழிமுறைகள், வாக்காளர் கட்டணமில்லா உதவி எண் 1950, மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் வாக்காளர் உறுதிமொழி தொடர்பான விவரச் சுவரொட்டிகள், பதாகைகள், காட்சிப் பலகைகள் வைக்கப்பட்டன.

**1.4.வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல் (SVEEP)**

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க, தமிழ்நாட்டில் பொது மக்களிடையே வாக்காளராகப் பதிவு செய்வது

மற்றும் மனசாட்சிப்படி வாக்களிப்பது ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 100 சதவீத வாக்காளர் பதிவு, என்னும் இலக்கின் அடிப்படையில் பல்வேறு அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. வாக்காளர் விழிப்புணர்வு செயல்பாடுகளில் ஒரு பகுதியாக ஓவியப் போட்டி, பாட்டுப் போட்டி, குறுஞ்செய்தி மற்றும் இணையவழி வினாடி வினாப் போட்டி ஆகிய பல்வேறு போட்டிகள் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில்

நடத்தப்பட்டன. மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம், 2022 தொடர்பான செயல்பாடுகள் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்களின் சமூக வலைதளப் பக்கங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பதிவேற்றம் செய்யப்பட்டது.

### 1.5. தேர்தல் பார்வையாளர்கள்

இந்தியத் தேர்தல் ஆணையம், கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தரப்பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களின் சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் 2022–க்கான தேர்தல் அட்டவணையை 08.01.2022 அன்று வெளியிட்டது. இதற்காக, தமிழகத்திலிருந்து 60 ஐ.ஏ.எஸ்., 14 ஐ.பி.எஸ்., மற்றும் 35 ஐ.ஆர்.எஸ். அதிகாரிகள் இந்தியத் தேர்தல்

ஆணையத்தால் தேர்தல் பார்வையாளர்களாக அனுப்பப்பட்டனர்.

### 1.6. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை (VVPATs) சேமிப்பதற்கான கிடங்குகள்

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை (VVPATs) முறையாக மற்றும் பாதுகாப்பாக சேமிப்பதற்குரிய போதுமான கிடங்குகளை உருவாக்குவதென இந்தியத் தேர்தல் ஆணையத்தால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, தலைமைத் தேர்தல் அதிகாரிகளை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி

செய்யும் கருவிகளை பாதுகாப்பான முறையில் சேமிப்பதற்கு அனைத்து மாவட்டங்களின் தலைமை இடங்களில் தனி கிடங்குகளை கட்டுமாறு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, 30 மாவட்டங்களில் (மதுரை மற்றும் சென்னை தவிர) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை சேமிப்பதற்குரிய கிடங்குகளைக் கட்டுவதற்கு ஏற்கெனவே மாநில அரசானது ரூ.120,87,42,000/- (ரூபாய் நூற்று இருபது கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரம் மட்டும்) வழங்கியது. மேலும், மதுரை மற்றும் சென்னை மாவட்டங்களுக்கான, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம்

அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை சேமிப்பதற்குரிய கிடங்குகளைக் கட்டுவதற்கு ரூ.13,35,00,000/- (ரூபாய் பதிமூன்று கோடியே முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்பொழுது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இராணிப்பேட்டை, தென்காசி, செங்கல்பட்டு, மயிலாடுதுறை, திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை சேமிப்பதற்குரிய கிடங்குகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 1.7. தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு

இந்தியத் தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணியை செம்மையாகவும், பயனுள்ள வகையிலும் நிர்வகிக்க ஏதுவாக கணினியில் பல மென்பொருட்கள் மற்றும் புதிய தகவல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்துள்ளபடி, தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் மற்றும் அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகங்களிலும் தேவையான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அடங்கிய தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியதன் அடிப்படையில் 4 இருக்கைகளுடன், 1800 4252 1950 என்ற எண் கொண்ட கட்டணமில்லா தொலைபேசி அழைப்பு மையம் வருடம் முழுவதும் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் இயங்கி வருகிறது.

## 1.8. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

தொடர் திருத்தம், 2021 மற்றும் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2022–இல் 18.64 இலட்சம் புதிய வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தப் புதிய வாக்காளர்களுக்கு இந்திய அஞ்சலகத் துறை மூலம் மார்ச், 2022 இறுதிக்குள் வண்ண வாக்காளர் புகைப்பட

அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மேலும், மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி, அரசு இ–சேவை மையங்கள் மூலமும், மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் அமைக்கப் பெற்றுள்ள வாக்காளர் அடையாள அட்டை அச்சிடும் இயந்திரத்தினாலும் (KIOSK) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வாக்காளர்கள், தங்களுடைய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைக்குப் பதிலாக மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாகப் பெறுவதற்கு அரசு இ–சேவை மையங்களில் படிவம் – 001 இல் விண்ணப்பிக்கலாம்.

## 2. நிதி ஒதுக்கீடு

தேர்தல் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு "2015.00. தேர்தல்கள்" என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண். 38.02.இல் இடம் பெற்றுள்ளது. 2022–2023 ஆம் நிதி ஆண்டில், தேர்தல் பணிகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள், 01.01.2023–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் புகைப்பட வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்குதல் ஆகிய

செலவினங்களுக்காக ரூ.199,34,87,000/- (ரூபாய் நூற்று தொண்ணூற்றொன்பது கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து எண்பத்து ஏழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன செலவினங்களுக்கான மதிப்பீடுகள் சில முக்கிய இனங்களுக்கு தலைப்பு வாரியாக கீழே விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன.

## 102. தேர்தல் அதிகாரிகள்

### AA. சட்டமன்றப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியம்

மற்றும் படிகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், சில்லறைச் செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் ஆகிய செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2022–2023–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.34,17,07,000/– (ரூபாய் முப்பத்து நான்கு கோடியே பதினேழு இலட்சத்து ஏழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

## 103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

### AA. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள்

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், திருத்துதல் மற்றும் அச்சிடுவதற்கான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் ஆகியவையும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு

ஆவணக் காப்பகத்தில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை பராமரிப்பதற்காக நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள ஓர் உதவியாளர் மற்றும் ஒரு பதிவுரு எழுத்தர் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் படித்தொகைகள் ஆகியவை இத்துணைத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு, வாக்காளர் பட்டியல் தரவுத்தளத்தை பராமரித்தல் மற்றும் தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்கள், ஆகிய செலவினங்களும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2022–2023–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.149,26,08,000/– (ரூபாய் நூற்று நாற்பத்தொன்பது கோடியே இருபத்தாறு

இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

## AC. மேலவைத் தொகுதிகள்

மேலவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் அச்சிடுதல் ஆகிய செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2022–2023–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் அடையாள நிதியாக ரூ.11,000/– (ரூபாய் பதினோராயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 104.நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

### AA.மக்களவைக்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்

மக்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல்கள் நடைபெறும்போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் (VVPATs) ஆகியன இராணிப்பேட்டை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு வேளாண்பொருள் ஒழுங்குமுறை

விற்பனைக்கூட கிடங்குகளிலும், திருவள்ளூர், சென்னை, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கழக நிறுவனக் கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. இக்கிடங்குகளுக்கான வாடகைக் கட்டணம் வழங்குவதற்கான செலவுகள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2,35,56,000/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

## 105. மக்களவைத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

### AA. இடைத்தேர்தல்கள்

மக்களவைத் தொகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களும் இத்துணைத்தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படும். 2022–2023–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அடையாள நிதியாக ரூ.16,000/– (ரூபாய் பதினாறாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 17–வது மக்களவைக்கான பொதுத் தேர்தல் 18.04.2019 அன்று நடைபெற்றது. மேலும், தற்பொழுது தமிழ்நாட்டில் மக்களவைத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை.

## AB. மக்களவைத் தேர்தல்

2022-2023-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் மக்களவைத் தேர்தலுக்கான செலவினத் தொகை அடையாள நிதியாக ரூ.24,000/- (ரூபாய் இருபத்து நான்காயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 17-வது மக்களவைக்கான பொதுத் தேர்தல் 18.04.2019 அன்று நடைபெற்றது. தற்பொழுது தமிழ்நாட்டில் மக்களவைத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை. அனைத்து செலவினங்களையும் ஒன்றிய அரசே ஏற்கின்றது. இச்செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, பின்னர்

ஒன்றிய அரசிடமிருந்து முழுமையாக திரும்பப் பெறப்படும்.

## 106. மாநில சட்டமன்றப் பேரவை தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

### AA. மாநில சட்டமன்றப் பேரவை

மாநில சட்டமன்றப் பேரவைக்கு நடைபெறும் பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்கள் செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2022–2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ரூ.1,05,26,000/– (ரூபாய் ஒரு கோடியே ஐந்து இலட்சத்து இருபத்தாறாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 16–வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல் 06.04.2021 அன்று நடைபெற்றது. தற்பொழுது

தமிழ்நாடு சட்டமன்றத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை. இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களையும் மாநில அரசே ஏற்கும்.

## AB. மாநில சட்டமன்ற மேலவை

மாநில சட்டமன்ற மேலவைத் தேர்தலுக்கான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும். 2022–2023 –ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் அடையாள நிதியாக ரூ.19,000/– (ரூபாய் பத்தொன்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**108. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்**

**AA. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்**

வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கான செலவினம் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.12,50,20,000/- (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஐம்பது இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமையின்கீழ் செயல்படும் முழு தேர்தல்

நிர்வாக அமைப்பும், தனது பொறுப்பினை முற்றிலும் உணர்ந்துகொண்டு, பிழைகளற்ற வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கவும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இத்தகு மிகப்பொறுப்பான குறிக்கோளை அடைவதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு தமிழக அரசு வழங்கி வருகின்றது.

**துரைமுருகன்**
**நீர்வளத்துறை அமைச்சர்**